

தொகுதி 1
சித்திரம் 6
பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்
வருத்த
விதை
www.ponnivala.com
© 2012 Ponnivala Publishing





பகுதி-1 சித்திரம்-6

# வறுத்த விதைகள்

குன்னுடையான் பங்காளிகளிடமிருந்து தனக்கு சொந்தமான நிலத்தில் சிறுபகுதியை பெற்றார். ஆனால் பொறாமை கொண்ட பங்காளிகள் வறுத்த விதைகளை விதைக்க கொடுத்தனர். விஷ்ணுவின் உதவியால் வறுத்த விதைகளும் முளைக்க தொடங்கின, அவர்களின் எதிர்கால வாழ்க்கையிலும் நம்பிக்கை துளிர்த்தது.




மறுவர்ணணை
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஒப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்


© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.





தாமரை எப்பொழுதும் தன் கணவனைப் பற்றியே எண்ணி கொண்டு வந்தாள்.
நானும், என் கணவரும் வாளவந்தியிலிருந்து அண்ணன்களால் துரத்தப்பட்டு, பொன்னிவளநாட்டிற்கு கொடும் வெயிலில் நீண்டதூரம் நடந்தேவந்தோம்.
உண்மையில்! என் கணவர் காராள பெருங்குடியில் பிறந்த விவசாயிதானா? அப்படியானால் அவருடைய நிலம் எங்கே?



செல்லாத்தாவின் கோவில் முன்...
கீகீ
கீகீ
கூகூ
தாமரை! இது தான் நம் குலதெய்வம் செல்லாத்தாவின் கோவில்.
பல வருடங்களாக, பூஜை இன்றி இருக்கிறாள். வா! கோவிலை சுத்தம் செய்து பூஜை செய்வோம்.
என்ன! அப்படியா!
முதலில் கோவிலை சுத்தம் செய்வோம்!


நானும் என் கணவரும் மூன்றுகாலமும் தவறாது பூஜை செய்து, உனக்கு பெருமை சேர்ப்போம்.
ம்ம்... ஆரம்பிப்போம்!
இருவரும் விரைவில் இடத்தை சுத்தம் செய்து செல்லாத்தாளை வணங்கினார்கள்.


குன்னுடையானும், தாமரையும் செல்லாத்தாக்கோவிலுக்கு அருகில் தங்களுக்காக குடிசை ஒன்றை கட்ட, அணியப்பூரை சேர்ந்த கவுண்டர் இருவர் உதவினார்கள். விரைவில் குடிசை தயாரானது.



அவர்கள் புது வாழ்க்கையை தொடங்க, அணியப்பூர்கவுண்டர்கள் ஒரு பசுவும், சில பொருட்களும் தானமாக கொடுத்தனர்.
தாமரை! வரும் திங்கட்கிழமை நல்லநாள். நாம் செல்லாத்தாளுக்கு பூஜை செய்ய ஆரம்பிப்போம்.
அருமையான யோசனை! அப்படியே செய்வோம்.
இருவரும் அணியப்பூர் கவுண்டர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு, கூடைநிறையப் பூக்களை எடுத்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றனர்.


மங்களம் உண்டாகட்டும்!
பல காலங்களுக்குப் பின்பு என் கோவிலைச்சுத்தம் செய்துள்ளீர்கள். இன்று தான் என் மனம் குளிர்ந்தது. யார் நீங்கள்?


தாயே! நான் தான் குன்னுடையாக் கவுண்டர்.
அப்பா! குன்னுடையா! நீ இங்கிருந்து போய் இருபத்தைந்து வருடம் ஆகிறது. நீ இவ்வளவு கலமாய் எங்கிருந்தாய்?
ஐந்து வருடங்கள் பங்காளிகள் வீட்டில் வேலைக்காரனாக இருந்தேன். பின்பு வாளவந்தியில் உள்ள பெரிய நிலக்கிழார்களிடம் இருபது வருடமாக வேலைசெய்தேன்.
பின்பு விஷ்ணுவின் அருளினால், அவர்களின் தங்கையான தாமரையை எனக்கு மணமுடித்து வைத்தார்.
உன் தந்தை இறந்த பிறகு, இன்றுவரை எனக்கு ஒரு பூஜை கூட நடக்கவில்லை. இப்பொழுது தான் சந்தோஷமாக இருக்கிறேன்.
பொன்னிவளநாட்டை விட்டுச் சென்ற பின், நடந்தது அனைத்தையும் குன்னுடையான் செல்லாத்தாளிடம் சொல்கிறான்.



குன்னுடையா! இன்றிலிருந்து நீ எனக்கு தினமும் மூன்றுகால பூஜை செய்ய வேண்டும்.
அப்படியே ஆகட்டும் தாயே! உங்கள் நிலத்தையும் நன்றாகப் பார்த்துக்கொள்வேன்!
நான் மீண்டும் ஒரு முறை செல்லாத்தாளை வணங்கி விட்டு வருகிறேன்.
இருவரும் அவர்கள் வீட்டிற்கு திரும்பினர்.


குன்னுடையான், ஒரு நாளைக்கு மூன்றுமுறை பூஜை செய்தான். இதனால் செல்லாத்தாவின் மனம் குளிர்ந்து, பொன்னிவளநாட்டில் நன்றாக மழை பெய்தது.
கீகீகீ
கீகீகூ
வீட்டில் உண்ண உணவு எதுவும் இல்லை. நான் வெளியில் சென்று ஏதாவது வேலை செய்துவிட்டு வருகிறேன்.
அப்பொழுது தாமரை வெளியே பார்த்தபடி...
யார் அவர்கள்? எங்கே எருதுகளை ஓட்டிக்கொண்டு கூட்டமாக செல்கிறார்கள்?



நான் இதைப்பற்றி உன்னிடம் முன்னமே கூறியிருக்கிறேன்.
அவர்கள்தான் நம் பூமியை ஏமாற்றி அபகரித்த பங்காளிகள்.
இப்போது வயலுக்குப் போகிறார்கள்.
நீங்கள், உங்களுடைய சொந்த நிலத்திலேயே தினக்கூலிக்கு வேலை செய்யப்போறீங்களா?


அவர்கள் கொடுப்பதை வைத்தா நாம் வாழ்வது?
ஏன் நம்முடைய நிலத்தில் நாமே விவசாயம் செய்யக் கூடாது?
ம்... நீ சொல்வதும் கூட சரிதான்.
இங்கேயே இரு, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நான் சீக்கரம் திரும்பி வந்து விடுகிறேன்.
குன்னுடையான் பொன்னிவளநாட்டிலிருந்து சோழநாட்டிற்கு சென்று சோழமன்னனை சந்திக்கின்றான்.


சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளுமில்லை!
யார் அப்பா நீ?
அரசே! நான் குன்னுடையான், பொன்னிவளநாட்டை ஆண்ட கோலாத்தா கவுண்டரின் மகன்.
ம்... குன்னுடையாக் கவுண்டர்! என் தந்தை உன்னைப்பற்றி சொல்லி இருக்கிறார்.
இவ்வளவு நாளாக எங்கே இருந்தாய்!
நான் பலவருடங்களாக வாளவந்தியில் இருந்தேன்.
இப்பொழுது என் மனைவியுடன் பொன்னிவளநாட்டிற்கு வந்துள்ளேன்.
நல்லது!



அரசே! நாங்கள் இங்கு வந்தவுடன் குலதெய்வம் செல்லாத்தாளுக்குப் பூஜை செய்தோம்.
அவள் மனம் குளிர்ந்து, மழை பெய்தது.
செல்லாத்தா மனதார உங்களை ஆசிர்வதித்துள்ளார்.
இன்று காலை என் மனைவி தங்கவளாவிலிருந்து எருதுளை ஓட்டி வந்த, என் பங்காளிகளைப் பார்த்துவிட்டாள்.
அவர்கள் பொன்னிவளாவில் எங்களுக்கு சொந்தமான பூமியில் விசாயம் செய்ய வந்தார்கள். நம் குடும்ப நிலத்தில் அவர்கள் வேலை பார்ப்பதை எப்படிப் நம்மால் பொறுத்துக் கொள்ள முடியும் என்றாள்.
உன் வருத்தம் புரிகிறது.
மேலும், அந்தப் பொறாமை பிடித்த பங்காளிகள், எங்களது அரண்மனையை இடித்துவிட்டு, அந்த இடத்தில் ஆமணக்கு செடிகளை வளர்த்து விட்டார்கள்.
இதைப்பார்த்தவுடன் நான் பதறிப்போய்விட்டேன். அதனால், தங்களைப் பார்த்து நீதி கேட்க வந்துள்ளேன்.


சரி! நான் என்ன செய்யவேண்டும்?
அரசே! என் பூமி எனக்கு வேண்டும். எனது உரிமையை கேட்பதில் தவறில்லையே.
உனக்கு உரிமை இருக்கிறது. நான் என்ன செய்யவேண்டுமோ, அதை செய்கிறேன்.
யார் அங்கே! உடனடியாக தங்கவளநாடு சென்று குன்னுடையானின் பங்காளிகளை அரண்மனைக்கு அழைத்து வா!
சேவகன் தங்கவளநாடு சென்று பங்காளிகளை அரண்மனைக்கு அழைத்து வந்தான்.
அனைவருக்கும் மங்களம் உண்டாகட்டும்!
இங்கே நிற்பது யார் என்று உங்களுக்குத் தெரியுமா?
உனக்கு அது யார் என்று தெரிகிறதா?
அது... கோலாத்தாவின் மகன் குன்னுடையான் போல் தெரிகிறது.



பல வருடங்களுக்கு முன் குன்னுடையான் இறந்து விட்டதாக எண்ணினோம்.
குன்னுடையாக் கவுண்டரின் தாய் தந்தை இறந்தவுடன், அவரை ஆதரித்து பார்பதாக, என் தந்தையிடம் உறுதியளித்தீர்கள். ஆனால், அவர் அரண்மனையை இடித்துவிட்டு,
உணவாக ராகிக்கூழையே ஊற்றி ஊரை விட்டே ஓடச்செய்தீர்கள்.
நாங்கள் அந்தச் சிறுவனுக்கு உதவி செய்தோம்.


நீங்கள் குன்னுடையான் இறந்துவிட்டதாக நினைத்தீர்கள். ஆனால், அவர் மறுபடியும் பொன்னிவளநாட்டுக்கு திரும்பி வந்துவிட்டார்.
எனவே, அவருடைய நாட்டையும், பூமியையும் அவருக்கே திருப்பி கொடுத்து விடுங்கள்.
அரசே! நீங்கள் சொல்வது போல் செய்கிறோம். ஆனால்! விளைச்சல் அறுவடைக்கு தயராக உள்ளது.
அறுவடை முடிந்ததும் கொடுத்து விடுகிறோம்.
வேண்டுமானால், குன்னுடையானுக்கு தற்சமயம் வேறு ஒரு நிலத்தை கொடுக்கிறோம்.
சரி! ஆனால்! அறுவடை முடிந்ததும், குன்னுடையானுக்கு சேர வேண்டியது அனைத்தையும் திருப்பி கொடுத்துவிட வேண்டும்.
குன்னுடையா!
நீ பொன்னிவளநாட்டுக்கு சென்று அவர்கள் தரும் நிலத்தில் உழுது விவசாயம் செய்.



குன்னுடையான் அதற்கு ஒப்புக்கொண்டு வீடு திரும்பினான். அவன் வெளியே சென்று நீண்டநேரம் ஆனதால், தாமரை வருத்தத்துடன் காத்திருந்தாள்.
தாமரை!
ஏன் இவ்வளவு நேரம்?
நான் நல்ல செய்தியுடன் வந்துள்ளேன்!
நான் சோழமன்னனை பார்த்து வருகிறேன்.
அவர் நம் பங்காளிகளிடமிருந்து சிறிதளவு பூமியை பெற்றுத் தந்துள்ளார். அறுவடை முடிந்ததும் மிகுதியை பெற்றுக் கொள்ளலாம்.
ஆ! இதைக் கேட்கும் போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது.
சிறிது பூமியாவது கிடைத்ததே!
தங்கவளநாட்டிற்கு சென்று உழுவதற்காக எருதுகளையும், வேலையாட்களையும் கூட்டி வருகிறேன்.
வேண்டாம்! பங்காளிகளிடம் எதற்கும் போகக்கூடாது.
அதற்கு பதிலாக, அணியப்பூர் கவுண்டர்களிடம் சென்று உதவி கேளுங்கள்.


குன்னுடையான் தாமரை சொன்னதுபோல் அணியப்பூருக்குச்சென்றார்.
வா குன்னுடையா? என்ன விசயம்?
அணியப்பூர்க் கவுண்டர்களே! சிறு உதவி கேட்டு வந்துள்ளேன்.
சோழ மன்னர், பங்காளிகளிடம் உங்கள் நிலத்தை திருப்பி தரச்சொல்லிவிட்டதாக கேள்விப்பட்டோம்.
ஆமாம்! அதனால் தான் நான் இங்கே வந்துள்ளேன்.
என் நிலத்தை உழுவதற்கு உங்களின் உதவி தேவை!
உங்கள் தந்தையிடம் வேலை செய்ததில் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். ஆகவே, கண்டிப்பாக உங்களுக்கு உதவுவோம்.


சரி! நாங்கள் பொன்னிவளநாட்டுக்கு எப்போது வரவேண்டும்?
நாளை காலையில் வாருங்கள்.
நல்லது! கோழி கூவும் முன்பாக எருதுகளுடன் நாங்கள் அங்கே இருப்போம்.


குன்னுடையான் அணியப்பூரில் இருந்து நல்ல செய்தியிடன் வீட்டிற்கு வந்தார்.
தாமரை, அணியப்பூரில் இருந்து நாளை அதிகாலையில் எருதுகளுடன் வந்துவிடுவார்கள். நாம் தானியவிதைகளை தயார் செய்ய வேண்டும்.
ஆ! அவர்களிடமே வாங்கி வரச்சொல்ல மறந்துவிட்டேன்.
நீங்கள் மறுபடியும் அணியப்பூர் சென்று விதையை வாங்கி வாருங்கள்.
பெண்ணே! அவர்கள் உழுவதற்கு உதவி செய்வதுமில்லாமல், இதையும் அவர்களிடமே கேட்பதா?
வேண்டாம், நான் தங்கவள நாட்டுக்கு சென்று விதைகளை வாங்கி வருகிறேன்.
நம் ஆயுசுக்கும் பங்காளிகளிடம் எதையும் கேட்கக் கூடாது.
அணியப்பூருக்கே செல்லுங்கள். தங்கவள நாட்டுக்கு போக வேண்டாம்.
சரி நான் அணியப்பூருக்கே சென்று வருகிறேன்.


குடும்ப நண்பர்களிடமே மீண்டும் செல்வதா? ஏன் பங்காளிகளிடம் கேட்க கூடாதா?
என் மனம் சொல்வதையே செய்யவேண்டும். ஆகவே, நான் தங்கவளநாட்டுக்கு செல்வதுதான் சரி.
குன்னுடையான் தாமரைசொன்னதைக் கேட்காமல் தங்கவள நாட்டுக்குச் சென்றார்.
குன்னுடையாக் கவுண்டா!
என்ன இந்தப்பக்கம்?
ஏதும் விஷயமாக வந்துள்ளாயா?
உங்களிடம் விதைகள் வாங்க வந்துள்ளேன். அறுவடை முடிந்ததும், திருப்பி தந்துவிடுகிறேன்.
நாளை என் நிலத்தில் விதைக்கலாம் என்றிருக்கிறேன்.
ம்..ம்... இங்கேயே இரு. உள்ளே சென்று, இருக்கிறதா? என்று பார்த்துவருகிறேன்.



பொன்னிவளாவிலிருந்து குன்னுடையான் நம்மைப்பார்க்க வந்துள்ளான்.
இதைக் கேட்டாயா?
அவனுக்கு விதைத் தானியம் வேண்டுமாம்.
அவனுக்கு கொடுத்தால் நம் பங்காளிகள் கோபப்படுவார்கள்?
எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.
சிறிதளவு சோளமும், கம்பும் எடுத்து பொன்நிறமாக வருத்துக்கொண்டு வா!





அந்தப்பெண் விதைகளை வருத்து அதை கணவனிடம் கொடுத்தாள்.
குன்னுடையா! இந்தா, இதுதான் என்னால் தரமுடிந்தது.
உங்கள் உதவிக்கு நன்றி! நான் போய் வருகிறேன்.



குன்னுடையான் வறுத்த விதைகளை வாங்கிக் கொண்டு வீடு திரும்பும் முன், நிலத்தை சென்று பார்த்தார். நிலம் எங்கும் பாறையாக விவசாயம் செய்ய முடியாதபடி இருந்தது.





ஓ விஷ்ணுவே!
இந்த நிலத்தில் உள்ள
கல்லையும், முள்ளையும் அகற்றி
சுத்தம் செய்ய எனக்கு
உறுதுணையாக இருங்கள்.
ஆகா!
விரைந்து சென்று
நான் குன்னுடையானுக்கு
உதவவேண்டும்.


விஷ்ணு அங்கு தோன்றி தன் சக்தியின் மூலம் நிலத்தை சரி செய்தார்.
அந்நிலம் கல்லும், முள்ளும் மறைந்து நிலம் விவசாயத்திற்கு தயாரனது.

அடுத்த நாள் காலையில் தாமரை விதை நெல்லைப் பார்த்தாள்.




ஊரில், என்னையல்லவா பழிசொல்லுவார்கள்!
தாமரை சீக்கிரம்! தாமதிப்பதற்கு இது நேரமில்லை.
அணியப்பூர்க் கவுண்டர்கள் இங்கே எந்த நேரமும் வரலாம்.
குன்னுடையாக் கவுண்டரே!
நாங்கள் வந்துவிட்டோம்.
கவுண்டர்கள் வந்து விட்டனர்.
எங்கள் விதி இப்படியா எழுதி இருக்க வேண்டும்.
குன்னுடையா! தயாரா?
நாங்கள் விரைவாக வேலையைத் தொடங்க வேண்டும்.
தாமரை! வயலுக்கு சென்று வருகிறேன்.


காஞ்சிநாதா! இந்த விதைகள் முளைக்காதே! மக்கள் எங்களை குறை கூறுவார்களே!


கவுண்டர்களே! வேலையைத் தொடங்கலாம்.
குன்னுடையானும் இரண்டு அணியப்பூர் கவுண்டர்களும் வயலுக்குச் சென்றனர்.
ஒவ்வொருவரும் ஏரைப் பிடித்து உழத்தொடங்கினர். குன்னுடையான் வறுத்த விதையை விதைத்தார்.
ஓ விஷ்ணுவே! வேறு வழியின்றி வறுக்கப்பட்ட விதைகளை விதைக்கிறேன்.
என் சதிகாரப் பங்காளிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.


அணியப்பூர் கவுண்டர்களே! உங்கள் உதவிக்கு நன்றி! என் குடிசைக்கு வந்து மோர் குடியுங்கள்.
வேலை நன்றாக முடிந்தது!
அனைவரும் குன்னனுடையானுடைய குடிசைக்கு வந்தனர்.
அணியப்பூர் கவுண்டர்களே! உங்கள் தாகம் தீர இந்த மோரைக் குடியுங்கள்.
உங்கள் உதவியை எங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டோம். கடுமையாக உழைத்ததற்கு நன்றி.


புதுமணத்தம்பதியர் இருவரும், அவர்களின் புதுவாழ்வை பொன்னிவளநாட்டில் தொடங்கினர். ஆனால், அவர்கள் விதைத்த வறுத்தவிதைகள் முளைக்குமா? சோழமன்னர் ஆணைப்படி, பங்காளிகள் குன்னுடையானுடைய நிலத்தை திருப்பி கெடுப்பார்களா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்

www.ponnivala.com/comic6tamil


வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு



சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்நது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com

ISBN 978-1-927093-47-4

© 2012 Ponnivala Publishing